**අධ්‍යාපන අමාත්‍යාංශය**

**கல்வி அமைச்சு**

**Ministry of Education**

"ඉසුරුපාය" , ශ්‍රී ජයවර්ධනපුර කෝට්ටේ
බත්තරමුල්ල
'இசுருபாயா' ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை
பத்தரமுல்ல
"Isurupaya", Sri Jayawardhanapura Kotte
Battaramulla.

**දුරකථන**/தொலைபேசி இல./Telephone Nos.

අමාත්‍යතුමා / அமைச்சர் / Minister: 2784832, 2784807, 2785617

ලේකම් / செயலாளர் / Secretary: 2784812

කාර්යාලය / அலுவலகம் / Office: 2785141-50, **Fax**: 2784846

ඊමේල්/–மெயில்/E-mail : isurupaya@moe.gov.lk


ඔබේ අංකය / உமது இல. / Your No: ………………………………

මගේ අංකය / எமது இல. / My No.: ED/1/1/5/3

දිනය / திகதி / Date: 2016. 04. 07

**சுற்றறிக்கை இலக்கம் 2016/ 10**

சகல மாகாணப் பிரதம செயலாளர்கள்,
சகல மாகாணக் கல்விச் செயலாளர்கள்,
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல கோட்டங்களுக்குப் பொறுப்பான ப.க.ப / உ.க.ப,
சகல அதிபர்கள்

## பாடசாலை மாணவர்களுக்காக நாடகங்களைக் காட்சிப்படுத்தல் மற்றும் அதுசார்ந்த ஏனைய வேலைத்திட்டங்களை நடாத்துவதை முறைப்படுத்தல், தரப்படுத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்

நாடகம் மற்றும் நடனக்கலை உட்பட மொழி இலக்கியம் ஆகிய பாடங்களின் கீழ் பெரும் எண்ணிக்கையான மாணவர்கள் நாடகக் கலையை தொடர்ந்த போதிலும் விசேடமாக இலங்கையின் பிரதான நகரங்களுக்குப் புறம்பாக பிரதேச ரீதியில் நாடகக் கலையில் விரிவாக்கல் பின்னடைந்து காணப்படுவதனால் கல்விச் செயற்பாடாக கலைசார் மற்றும் பண்புசார் தரத்துடன் உயரிய மட்டத்தில் நாடகங்களைப் பார்வையிட மற்றும் அவ்விடயங்களுக்குரிய உதவி வேலைத்திட்டங்களை நடாத்தும் தேவை இப்பாட அபிவிருத்திக்கான அவசியம் என இனங்காணப்பட்டுள்ளது. இதற்கமைய நாடக மற்றும் நடனக் கலை உட்பட மொழி மற்றும் இலக்கியப் பாடங்களில் நாடக ஆக்கங்கள் சார்ந்த வேலைத்திட்டங்களை நடாத்துவது தொடக்கம் கீழ் குறிப்பிடப்பட்டவாறு நிபந்தனைகள் அமுல்படுத்தப்படுகின்றன.

இதற்கு முன்னர் வெளித்தரப்பினர்களுக்கு பாடசாலைப் பிள்ளைகளுக்காக நாடகம் மற்றும் திரைப்படங்களைக் காட்சிப்படுத்தும் வேலைத்திட்டங்களை நடாத்துவதற்காகத் தரப்படுத்தல் என்ற தொனிப்பொருளில் கல்விச் செயலாளரின் ஒப்பத்துடன் 2012.05.17 ஆம் திகதி வெளியிடப்பட்ட 2012/16 கொண்ட சுற்றறிக்கை இத்தால் இரத்து செய்யப்படுவதுடன் நாடகம் தொடர்பில் இதற்கு முன்னர் இவ் அங்கீகாரம் வழங்கப்பட்டிருப்பின் இச்சலக அங்கீகாரங்களும் இத்தால் இரத்து செய்யப்படுகின்றது.

### 1.1. பாடசாலை மாணவர்கள் பார்வையிடுவதற்குப் பொருத்தமான நாடகங்கள்

1.1.1. அரசினால் நடாத்தப்பட்ட மற்றும் தற்போது நடாத்தப்படும் நாடக விழாக்கள் அல்லது போட்டிகளில் இறுதிச் சுற்று எனும் தேசிய மட்டம்

அ) கல்வி அமைச்சினால் நடாத்தப்படும் அகில இலங்கை பாடசாலை நாடக மற்றும் நடனக் கலை போட்டி தற்போது நடாத்தப்பட்டு அகில இலங்கை பாடசாலை நாடக மற்றும் நடனக் கலை விழாவில் சிறந்த ஆக்கங்களில் முதலிடம் பெற்ற நாடகங்கள் (அனுமதி கோரும் தினம் தொடக்கம் அண்மித்த 03 ஆண்டுகளுக்குள் தயார்படுத்தப்பட்டிருக்க வேண்டிதுடன் அவ் ஆக்கத்திற்கு பங்களிப்பு செய்த பாடசாலைக்கு மாத்திரம் இதில் பங்கேற்க முடியும்)
ஆ) கல்வி அமைச்சினால் நடாத்தப்படும் அரச பாடசாலை நாடக விழாவில் சிறந்த ஆக்கங்களில் முதலிடம் பெற்றுக் கொண்ட நாடகம் (அனுமதி கோரும்

தினம் தொடக்கம் அண்மித்த 03 வருடங்களுக்குள் தயாரிக்கப்பட்டிருக்க வேண்டியதுடன் அவ் ஆக்கத்திற்குப் பங்களிப்பு செய்த பாடசாலை மாத்திரம் இதற்காக தோற்ற முடியும்)

இ) இலங்கை கலை சபையின் அரச நாடக உப சபையின் பங்களிப்புடன் நடாத்தப்பட்ட அரச சிறுவர் நாடக விழாவின் சிறந்த ஆக்கங்களுக்கு 1வது, 2வது மற்றும் 3 வது இடங்கள் பெற்றுக் கொண்ட நாடகம் (அனுமதி கோரும் தினம் தொடக்கம் அண்மித்த 03 வருடங்களுக்கு அரச சிறுவர் நாடக விழாவில் சமர்ப்பிக்க வேண்டும் அதனைவிட பழைய நாடகங்கள், இந்நாடகக் காட்சிகள் அரச நாடக உப சபைக்குச் சமா்ப்பிக்கப்பட்டுள்ள அனுமதி கோரும் வேளையில் அவ் ஆக்கங்களில் காணப்படும் கலைசாா் மற்றும் பண்புசாா் தரம் தொடா்பில் தரச்சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும்)

ஈ) கல்வி அமைச்சு மற்றும் டவா்கோள் மண்டபத்துடன் இணைந்து ஒழுங்கு செய்யப்பட்ட அகில இலங்கை பாடசாலை டவா்கோள் நாடகப் போட்டியில் சிறந்த ஆக்கம் முதலாவது இடத்தைப் பெற்ற நாடகம் (அனுமதி கோரும் தினம் தொடக்கம் அண்மித்த 03 ஆண்டுகளுக்குத் தயாரிக்கப்பட்டிருக்க வேண்டியதுடன் அவ் ஆக்கத்திற்கு பங்களிபபு செய்த பாடசாலைக்கு மாத்திரம் அதற்காக தோற்ற முடியும்)

1.1.2. ஏற்கனவே அல்லது இதற்கு முன்னா் பாடசாலைகளில் நடாகம் மற்றும் நடனக் கலை, மொழி மற்றும் இலக்கியம் ஆகிய பாடவிதானங்களுக்காக தேசிய கல்வி நிறுவனத்தினால் பரிந்துரை செய்யப்பட்ட கீழ் குறிப்பிட்ட நாடக ஆக்குனா்கள் மற்றும் நாடகங்களின் தயாரிப்புக்கள்

| நாடகத்தின் பெயா் | தயாரிப்பாளா் / பணிப்பாளரின் பெயா் |
|---|---|
| பிள்ளை அழுத கண்ணீர் | சி. ஜெயசங்கர் |
| கண்டறியாத கதை | ம. சன்முகலிங்கம் |
| அரசனின் புத்தாடை | மாவை. நித்தியானந்தன் |
| சங்கிலி | பேராசிரியர். கணபதிப்பிள்ளை |
| ஆரோடு நோகேன் | ம. சன்முகலிங்கம் |
| புதியதோர் வீடு | மஹாகவி. து. உருத்திரமூர்த்தி |
| கோடை | மஹாகவி. து. உருத்திரமூர்த்தி |
| இராவணேசன் | சி. மௌனகுரு |

1.1.3. ஏற்கனவே அல்லது இதற்கு முன்னா் பாடசாலைகளில் நடாகம் மற்றும் நடனக் கலை, மொழி மற்றும் இலக்கியம் ஆகிய பாடவிதானங்களுக்காக தேசிய கல்வி நிறுவனத்தினால் பரிந்துரை செய்யப்பட்ட கீழ் குறிப்பிடப்பட்ட வெளிநாட்டு நாடகங்களின் உள்நாட்டுத் தயாரிப்பு

| நாடகத்தின் பெயா் | மூல நாடகத்தை எழுதியவரின் பெயா் |
|---|---|
| ஜூலியஸ் சீசர்ஸ் | வில்லியம் சேர்க்ஸ் பியர் |
| கிங் வியர் | வில்லியம் சேர்க்ஸ் பியர் |
| ஒத்தோலோ | வில்லியம் சேர்க்ஸ் பியர் |
| மேச்சன் ஒப் வெனிஸ் | வில்லியம் சேர்க்ஸ் பியர் |
| ஒரு பாவையின் வீடு | ஹென்றிக் இப்சன் |
| அபிக்ஞான சாகுந்தலம் | காளிதாசன் |
| ஈடியஸ் | சோ. போகிளிஸ் |
| அன்டிகனி | சொபொக்லீஸ் |
| த கொக்கோசியன் வேல்க் சேர்க்கில் | வேர்க் டோல்ட் பிரஸ்ட் |
| த பிராபோர்சல் | அன்டன் சொக்கோவ் |
| ரத்னாவலி | ஶ்ரீ கர்சதேவ |
| த ச்சவுரி போர்சட் | அன்டன் சொக்கோவ் |

1.2. **மேற்கூறப்பட்ட 1.1 இன் கீழ் தளுவப்படாத வேலைத்திட்டங்களை நடாத்துவதற்கான கட்டாய நிபந்தனைகள்**

1.2.1. மேற்கூறப்பட்ட 1.1.3 பிரிவின் கீழ் நாடகங்களின் தயாரிப்புக்கள் மேற்கூறப்பட்ட பெயரைக் கொண்ட மூல நாடகங்களை எழுதுபவரின் உரிய நாடகப் பிரதிகள் சகல முறைகளிலும் ஒப்பீடாக இருக்க வேண்டியதுடன் அவ் உற்பத்திகளின் கலைசார் தரங்க்ள மற்றும் பாடசாலை பிள்ளைகளுக்குப் பார்ப்பதற்கு பொருத்தமானது என இலங்கை கலை சபையின் அரச நாடக உப சபையினால் வழங்கப்படும் சான்றிதழை சமர்ப்பிப்பது கட்டாயமானதாகும்.

1.2.2. மேற்கூறப்பட்ட 1.1.1. (இ) 1.1.2. மற்றும் 1.1.3 பிரிவுளுக்குரிய நாடகங்களில் மூல நூல் / ஆக்கங்கள் தமக்குரியதல்லாததாயின் தமக்கு அவற்றை சமர்ப்பிப் பதற்கான இயலுமை சட்ட ரீதியாக உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

2.1. **மேற்கூறப்பட்ட தரங்களுக்கு மேலதிகமாக சமர்ப்பிக்கப்படும் வேலைத்திட்டங்கள்**

2.1.1. தற்போது அமுலில் உள்ள நாடகம் மற்றும் நடனக் கலை விடயங்களின் இரசனை மற்றும் பிரயோப் பிரிவுகளுக்கு நேரடியாக உரியதான அல்லது பாட அறிவினை ஊட்டக்கூடிய வகையில் பாடசாலை கல்வி மற்றும் உயர் கல்வித் துறையின் பாட புத்திஜீவிகள் அல்லது தேசிய மட்டத்திலான விடய நிபுனர்களினால் தயாரிக்கப்பட்ட செயலமர்வு மற்றும் அது சார்ந்ததாக நடிக்கும் நாடகங்கள்

2.1.2. ஏனைய அரச அல்லது அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினால் மாத்திரம் மேற்கொள்ளப்படும் அல்லது அந்நிறுவனங்களின் அனுசரனையின் கீழ் மேற்கொள்ளப்படும் ஊக்குவிப்பினை அடிப்படையாகக் கொண்ட (உ+ம் போதைப் பொருள் தடுப்பு, சுகாதாரம், சுற்றாடல் போன்றன) இலவசமாகக் காட்சிப்படுத்தும் நாடகங்கள்

2.1.3. மேற்கூறப்பட்ட நாடக வகைகளுக்குரியதல்லாத கலைசார் தரங்கள் அதிஉயரிய மட்டத்தில் பிள்ளைகளுக்குப் பார்ப்பதற்கு பொருத்தமான ஏனைய நாடக ஆக்கங்கள்

2.2. **மேற்கூறப்பட்ட 2.1 இன் கீழ் தளுவப்படாத வேலைத்திட்டங்களை நடாத்துவதற்கான கட்டாய நிபந்தனைகள்**

2.2.1. மேற்கூறப்பட்ட 2.1.1 இன் கீழ் அடங்கும் வேலைத்திட்டங்களுக்கு அங்கீகாரம் வழங்குது அது சார்ந்த செயலமர்வுகளின் காணப்படும் கல்விப் பொருத்தப்பாடுகள் தொடர்பில் தேசிய கல்வி நிறுவகத்தின் அழகியல் கல்வி பிரிவு அமைச்சின் அழகியற் கல்விக் கிளையுடன் இணைந்து மேற்கொள்ளும் மீளாய்விற்குப் பின்னர் மாத்திரமாகும்.

2.2.2. மேற்கூறப்பட்ட 2.1.1, 2.1.2, மற்றும் 2.1.3 பிரிவின் கீழ் அடங்கும் நாடகங்கள் பாடசாலை மாணவர்களுக்குக் காட்சிப்படுத்துவதற்காக விண்ணப்பிக்கும் போது அவற்றின் கலைசார் தரங்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு பார்ப்பதற்கு பொருத்தமானது என இலங்கை கலை சபையின் அரச நாடக உப சபையினால் வழங்கப்படும் சான்றிதழை சமர்ப்பிப்பது கட்டாயமானதாகும்.

2.2.3. இச்சகல ஆக்கங்களும் பாடசாலை முறைமையில் அங்கீகரிக்கப்பட்ட பெறுமதிகளுக்கு பாதிப்புக்கள் ஏற்படுத்தக்கூடாது.

2.2.4. கலாச்சார மற்றும் சமூக ரீதியில் பொருத்தமற்ற மொழிப் பயன்பாடுகள் இன்றி இருக்க வேண்டும்.

2.2.5. போதைப் பொருள் மற்றும் புகைத்தல், கொலை அல்லது சித்திரவதைகளுக்குரிய வன்முறைகள் தொடர்பான காட்சிகள், மனை வன்முறைகள் மற்றும் பாலியில் உணர்வினை அதிகரிக்கக்கூடிய காட்சிகளை காண்பிக்கக் கூடாது.

2.2.6. சமர்ப்பிக்கப்படும் வேலைத்திட்டங்களின் தொனிப்பொருள், கதை வசனம், பாடல் வரிகள் உரையாடல்கள் இன மத பேதங்களுக்கு மற்றும் வேறு சமூக எதிர்ப்பு நோக்கங்களுக்கு உரியதல்லாத அவ்வாறான கருத்துக்களை வலியுறுத்தாதவைகளாக இருக்க வேண்டியதுடன் அவ் விடயத்தை வலியுறுத்தக்கூடிய விளக்கங்கள் இருக்கக் கூடாது.

2.2.7. தமக்குரிய அல்லது என்மை பிரதிநிதித்துவப்படுத்தும் இன மத கலாச்சார அரசியல் பேதங்கள் அல்லது கொள்கைகள் காரணமாக ஏதேனும் ஒரு நபர், நிறுவனம் அல்லது சமூகத்தினர் சிரமத்திற்குட்படுத்தக்கூடியவாறு காட்சிகள் அமையாது இருத்தல் வேண்டும்.

**3. தகைமைகளைப் பூர்த்தி செய்யும் நிகழ்ச்சிகளைக் காட்சிப்படுத்த விண்ணப்பதாரிகளுக் குரியதான ஏனைய நிபந்தனைகள்**

3.1. மேற்கூறப்பட்ட 1.1.1. 1.1.3, 2.1.1, 2.1.2 மற்றும் 2.1.3 தளுவப்படாத நாடகங்களை காட்சிப்படுத்துவதற்காக அனுமதி கோரும் போது நாடகத்தின் பிரதியுடன் மேற்கூறப்பட்ட தரம் கொண்ட தகைமைகள் தொடர்பில் உரிய நிறுவனத்தினால் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்கள் கல்வி அமைச்சிற்குச் சமர்ப்பித்த காட்சிக்காக பரிந்துரைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

3.2. மேற்கூறப்பட்ட 1.1, 1.2 மற்றும் 1.3 இன் தளுவாத நாடக ஆக்கங்களை வலய மட்டத்தில் காட்சிப்படுத்தும் போது கல்வி அமைச்சு உட்பட உரிய சகல நிறுவனங்களினதும் ஆக்கங்கள் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு கட்டாயமாக சமர்ப்பித்து அனுமதியினை பெற வேண்டும்.

3.3. பாடசாலை அமைந்துள்ள பிரதேசத்திற்கு அண்மித்த நடன மண்டபம் பாடசாலை நேரத்திற்குள் நடாத்தும் நாடகக் காட்சியாயின் அந்நாடகத்தை பார்க்க பாட இணை அடிப்படையில் அவசியமாக மாணவர்களுக்கு மாத்திரம் பெற்றோர் இணக்கத்துடன் மற்றும் அக்கல்லூரிக்குரிய வலயத்தின் வலயக் கல்விப் பணிப்பாளரின் அங்கீகாரத்துடன் அழைத்து செல்ல முடியும் கல்லூரிக்கு இச்சந்தர்ப்பதை வழங்க முடிவது பாடசாலை செயற்பாடுகளுக்கு மற்றும் மாணவர்களின் கற்கை செயற்பாடுகளுக்கு பாதிப்புக்கள் ஏற்படாத வகையில் ஆண்டுக்கு இரு தடைவை மாத்திரமாகும்.

3.4. மேற்கூறப்பட்ட 1.1 மற்றும் 2.1 இன் கீழ் தளுவக்கூடிய ஏதேனும் வேலைத்திட்டகள் பாடசாலை நேரத்திற்குள் ஏதேனும் ஒரு பாடசாலையில் நடாத்தப்படுவதாயின் அக்கல்லூரிக்குரிய வலயத்தின் வலயக் கல்விப் பணிப்பாளரின் முன் அங்கீகாரத்திற்கமைய அது மேற்கொள்ளப்பட வேண்டும். கல்லூரியில் இச்சந்தர்ப்பத்தை வழங்க முடிவது ஆண்டுக்குள் 1 வது மற்றும் 2 வது பாடசாலை தவணைகளுக்குட்பட்டு மாத்திரம் என்பதுடன் அதுவும் வருடத்திற்கு இரு தடவைகள் மாத்திரமாகும்.

3.5. பிள்ளைகளின் பாதுகாப்பு தொடர்பிலான பொறுப்பு அதற்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள ஏனைய ஆசிரியர்களுக்கு பொறுப்பளிக்கப்படுவதுடன் கல்வித் தேவைகளை அடிப்படையாகக் கொள்ளும் இப்பணிகளின் முழுமையான பொறுப்பு மேற்பார்வை மற்றும் மாதிப்பீடுகள் உரிய கல்லூரியின் அதிபர்கள் மற்றும் அக்கல்லூரிக்குரிய வலயக் கல்வி பணிப்பாருக்குப் பொறுப்பளிக்கப்படுகின்றது.

3.6. மேற்கூறப்பட்ட 3.2. மற்றும் 3.3 நிபந்தனைகள் தளுவப்படாத சந்தர்ப்பங்கள் தொடர்பில் உரிய வலயத்தின் வலயக் கல்விப் பணிப்பாளரின் முறையான அங்கீகாரக் கடிதம் இன்றி நாடகங்களை காட்சிப்படுத்தும் ஏற்பாட்டாளர்களின் ஆவணங்கள் அல்லது அழைப்புகளுக்கமைய நடவடிக்கை எடுப்பது முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளதாகும்.

3.7. தமது வலயத்தில் நடாத்துவதற்கு அனுமதி வழங்கப்படும் வேலைத்திட்டங்கள் தொடர்பாக உரிய வலயத்தின் வலயக் கல்விப் பணிப்பாளர் தமது மாகாணத்தின் மாகாணக் கல்விச் செயலாளரை அறிவுறுத்த வேண்டும்.

3.8. அனுமதி வழங்கப்பட்ட நிகழ்ச்சிகள் தொடர்பாக இருந்த போதிலும் முறைப்பாடுகள் மற்றும் குற்றச்சாட்டுக்கள் சமர்ப்பிக்கப்படுவதாயின் உரிய விடயங்களை ஆராய்ந்ததன் பின்னர் உடனடியாக அவ்அங்கீகாரத்தை இரத்து செய்ய முடிவதுடன் அவ்வாறு இரத்து செய்யப்படும் வேலைத்திட்டங்களுக்கு இதற்குப் பின்னர் எந்த சந்தர்ப்பத்திலும் மீள அனுமதி வழங்கப்பட மாட்டாது. அது தொடர்பில் கல்வி அமைச்சின் செயலாளருக்கு தாமதம் இன்றி அறிவிக்க வேண்டும்.

3.9. இவ் வேலைத்திட்டம் மூலம் பாடசாலையின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளைப் போன்று அதன் ஒழுக்கத்திற்கு எம்முறையில் தடைகள் ஏற்படக்கூடாது என்பதுடன் அது சார்ந்ததான பாடசாலைக்குரிய சுற்றறிக்கை, சட்ட ஒழுங்கு விதிமுறைகள் பிரமாணக் குறிப்பு மற்றும் நிதி ஒழுங்குக் கோவைகளை எக்காரணம் கொண்டும் மீறக்கூடாது

3.10. அனுமதிப்பத்திரங்களை கொள்வனவு செய்வதற்காக மாணவர் மாணவிகள் மற்றும் பெற்றோரை வற்புறுத்துவது முற்காக தடை செய்யப்பட்டுள்ளது.

3.11. நிகழ்ச்சித் திட்டத்தின் செலவினத்திற்காக நாடக ஏற்பாட்டாளர்கள் நிதி அறவிடுவதாயின் (2.1.2 இனைத்தவிர) வலயக் கல்விப் பணிப்பாளரின் அங்கீகாரத்தின் கீழ் மிகுந்த நியாயமான சலுகை நிதியினை பிரவேச அனுமதிப்பத்திரத்திற்காக அறவிட வேண்டும். ஒரு நாடகக் காட்சிக்காக விற்பனை செய்யப்படும் அனுமதிச்சீட்டின் எண்ணிக்கை மற்றும் அம்மண்டபத்தில் ஆசனங்களின் எண்ணிக்கைக்கு சமமாக இருக்க வேண்டியதுடன் அது அக்கலை மண்டபம் அடங்கும் கல்வி வலயத்தின் வலயக் கல்விப் பணிப்பாளரின் முன் அங்கீகாரத்திற்கு சமர்ப்பித்து அனுமதி பெற்றுக் கொள்ள வேண்டும்.

3.12. காட்சிக்காக உரிய மண்டபத்திற்கு மாணவர்களை அனுமதிக்கும் போது எதுவித சிரமங்களும் இன்றி மண்டபத்தில் தங்கியிருக்கக்கூடிய அளவு மாத்திரம் உட்படுத்த வேண்டும்.

3.13. பாடசாலையில் நாடகக்காட்சியினை நடாத்த அனுமதி பெற்ற நாடகத்திற்குப் பாடசாலை நேரத்திற்குள் நடாத்துவதற்கு அனுமதி இருப்பது ஒரு நாடகக் காட்சிக்கு மாத்திரமாகும்.

3.14. இச்சுற்றறிக்கைகமைய காட்சிக்காக அங்கீகரிக்கப்பட்ட நாடகங்களைத் தவிர வேறு எந்தவொரு நாடகமும் “பாடசாலைக் காட்சி” என ஆரம்பக் கூட்டப் பிரச்சாரப் பணிகளை மேற்கொள்வது முற்காகத் தடை செய்யப்பட்டுள்ளது. சுற்றறிக்கைக்கமைய காட்சிப்படுத்துவதற்காக அங்கீகரிக்கப்பட்ட நாடகங்களுக்குரிய கல்வி வலயம் சார்ந்த “பாடசாலை காட்சி” என ஆரம்ப பிரச்சாரப் பணிகளை மேற்கொள்ள வேண்டியதும் உரிய வலயக் கல்விப் பணிப்பாளரின் முன் அங்கீகாரத்தின் மாத்திரமாகும்.

3.15. இச்சுற்றறிக்கையின் நிபந்தனைகளுக்கமைய அனுமதி வழங்கப்பட்டுள்ள நாடகங்கள் தொடர்பான தகவல்கள் www.moe.gov.lk கொண்ட கல்வி அமைச்சின் இணைத்தளத்தின் ஊடாக பகிரங்கப்படுத்தப்படும்.

3.16. மேற்கூறப்பட்டவாறு பகிரங்கப்படுத்தப்படாத இச்சுற்றறிக்கையின் நிபந்தனைகளுக்கு ஒவ்வாதவாறு “பாடசாலைக் காட்சி” என தமது முன் பிரச்சாரப் பணிகளை மேற்கொள்ளும் எந்தவொரு நாடகமும் காட்சிக்காக பாடசாலையின் தமது பிள்ளைகளை பங்கேற்கச் செய்வது முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது.

3.17. ஆசிரியர் நலன்புரி பணிகள் மற்றும் பழைய மாணவர் சங்கங்களுக்கு நிதி பெற்றுக் கொள்ளும் நோக்குடன் மாணவர்களுக்கு அனுமதிச் சீட்டுக்களை விற்பனை செய்து இந்நாடகங்களை காட்சிப்படுத்துவதைத் தடை செய்யப்பட்டுள்ளது.

3.18. இச்சுற்றறிக்கையின் நிபந்தனைகளை மீறக்கூடியவாறு ஏதேனும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படின் அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும்

இச்சுற்றறிக்கைக்கு உட்படாத எதேனும் விடயம் இருப்பின் அது தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கும் உரிமை நிரல் அமைச்சின் செயலாளருக்குரியதாகும்.

**டப்ளியு.எம்.பந்துசேன**
செயலாளர்
கல்வி அமைச்சு